383

மாஸ்டர். S. G. கிட்டப்பா, K. B. சுந்தராம்பாள்,
பாடிவரும்

நந்தனர்.

8 SEP 1953
MADRAS

...ள் விலாச புத்தகசாலை,
...ற்றியூர் போஸ்டு, மதராஸ்.
1933. [அணு 0 2 0

Q23wx1, TN
N33

இப்புத்தகத்தைப்போல் ஆங்கில பாஷையைப் போதிக்கும் நூல்

ஆங்கிலபோதகன்

இதை வாசித்தால் சில மாதங்களில் ஆங்கிலம் எழுதவும் பேசவும் நன்றாய்க் கற்றுக்கொள்ளலாம். இதற்கு உபாத்தியாயர் தேவையில்லை. இதில் ஆங்கில எழுத்துக்களையும், பதங்களையும் தமிழில் உச்சரிக்கும் விதங்களைக் காட்டி ஆங்கிலபாஷையிலுள்ள இரண்டெழுத்துச்சொற்கள்முதல் பலவெழுத்துச் சொற்களையும் விவரித்துஅவற்றிற்குச்சரியான தமிழ் உச்சரிப்புக்களையும், தமிழ் அருத்தங்களையும் அவ்வப் பதங்களைக்கொண்ட வாக்கியங்களையும், படிப்படியாக யாவரும் வெகுசுலபமாய்த் தெரிந்து கொள்ளும்படி எழுதப்பட்டிருப்பதுடன்மிருகங்கள், பட்சிகள் வீட்டுச் சாமான்கள், உணவுப்பொருள்கள்குடும்பவிவகாரங்கள், வியாபார விஷயங்கள், தேகாரோக்கியம், சரீரக்கூறுகள், உத்தியோக விஷயம், நீதிஸ்தானம் முதலிய அரசாங்க விவகாரங்கள், சிநேக சம்பாஷணைகள், கடிதமெழுதும் முறைகள், கிராமாதிசயங்கள், பட்டணவாழ்க்கை, தொழிற்சம்பந்தமான விஷயங்கள், விண்ணப்பங்கள் கலியாண முதலிய சுபலிகிதங்கள், வியாசங்கள், சிறு கதைகள், இன்னும் பிறவிஷயங்களும் சுலபமான நடையில் ஆங்கிலத்திலும் தமிழிலும் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

இஃது ஆங்கிலம் கற்க அவாவுறும் ஆண்மக்களுக்கும் பெண்மக்களுக்கு மாத்திரமன்றி கிராமாதிகாரிகள், கணக்கப் பிள்ளைகள் தோட்டக்கங்காணிகள், கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள், இராணுவசிப்பாய்கள்,வியாபாரிகள்,ஐரோப்பியரிடமிருக்கும்தொழிலாளர்கள் முதலிய யாவருக்கும் மிகவும் அவசியமானது.

உயர்ந்த கிளேஸ் கடிதம் காலிகோ பைண்டு புத்தகம் 1-க்கு ரூ. 2.

ஸ்ரீ பாரதி புத்தகசாலை, சூளை போஸ்ட், சென்னை.

உ

கடவுள் துணை

S. G. கிட்டப்பா, K. B. சுந்தராம்பாள்

இவர்கள் பாடிவரும்

நந்தனார்

அல்லது

நாளைப்போவார் சரித்திரம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 SEP 1933
MADRAS

விநாயகர் துதி வெண்பா.

கந்தன் றனையளித்த காதலனார் பேறுபெற்ற
நந்தன் சரித்திரத்தை நானியம்பச்-சுந்திரஞ்சேர்
தில்லைமணி கோபுரத்தின் றேடிவளர் கற்பகத்தாள்
அல்லும் பகற்றுணையே யாம்.

இராகம்-சங்கராபரணம், தாளம்-ஆதி.

பல்லவி

நந்தன் சரித்திரமா னந்தம் ஆனுமத்தி
யந்தம் பக்திரஸகந்தம் சொல்லச் சொல்ல நந்

அநுபல்லவி

1 நந்தன் சரித்திரம் வெகு அந்தம் சிவனாருக்குச்
சொந்தம் தொலையும் பவபந்தம் கேட்டபேருக்கு நந்

2 ஏது இவனைப்போல சாது பூமியிலிருக்காது
அரிது இருகாது படைத்தபேர்க்கு நந்

3 வாடி மனதிளகிப்பாடி அரகராவென்
றுடி கனகசபைநாடிச் சேருவேனென்ற நந்

சரணம்

அண்டர்கொண்டாடும்சோழ மண்டலநாதனைச்சூழ
கொண்டேமேற்கா நாட்டிற் சேருவேனென்ற நந்

நந்தன்சொல் தரு.

இராகம்-ஆனந்தபைரவி. தாளம்-ரூபகம்.

பல்லவி

வாரிருக்குது தோலிருக்குது வாங்கிக்கொள்ளுவீரே
மத்தளங்கள்
பேரிகைக்கும் வீணைக்கும்நல்லவிறுக்கிக்கட்டும்விசை
பேரிருக்குது போதுஞ்சிவன் பெருமைக்கொண்ட
தினமும்
சீருறைகின்ற தில்லைப்பதியில் சேருதற் குபாயந்தேட வ
சிறியவன் சாதியொன்று மறியாதவனேனழை சிவ
பெருமானுக்கடியேன் செய்யும் பணிவிடையிது வா

நந்தன் சிவதரிசனஞ்செய்ய விரும்புதல்.

இராகம்-ஆனந்தபைரவி, தாளம்-ரூபகம்.

பல்லவி.

சிவலோக நாதனைக்கண்டு சேவித்திடுவோம் வாரீர்

அநுபல்லவி.

பவபயங்களைப் போக்கி அவர்
பரமபதத்தைக் கொடுப்பாரந்த சிவ

1 அற்பசுகத்தை நினைந்தோம் அரன் திருவடி மறந்தே
கற்பிதமான ப்ரபஞ்சமீது கானல்சலம்போலஎன்னி

2 ஆசைகடலிலிருந்தோமினி யறிவுக்கறிவையிழந்தோ
பாசமகல வழிதேடாமல் பரதவிக்கும் பாவியானேம்

3 மானிட சன்மங்கொடுத்தார் தன்னைவருந்தகரங்
[களளித்தார்
தேனும்பாலும்போலசென்று தேரடியில்நின்றுகொண்டு

நந்தன் நந்தியைக்கண்டு துக்கித்தல்

MADRAS

இராகம்-தேசிகதோடி, தாளம்-ஆதி.

பல்லவி.

வழிமறைத் திருக்குதே மலைபோல
ஒரு மாடுபடுத் திருக்குதே வழி

சரணம்.

பாவிபறையனிந்த ஊரில்வந்து மிவன்
பாவந்தீரேனே உந்தன்
பாதத்திற்சேரேனே யேறேனே சிவலோகநாதாமாடு

2 தேரடியில்நின்று தெரிசித்தாலும்
போதும்கோவில் வரமாட்டேனே
ஐயோ ஓரடிவிலகினல் போதுமங்கே நின்று
உற்றுபார்க்கச்சற்றே விலகாதோமாடு வழி

வாமி நந்தியை விலகும்படி உத்திரவளித்தல்.

இராகம்-அங்குசதொனி, தாளம்-ரூபகம்.

பல்லவி.

சற்றேவிலகியிரும்பிள்ளாய் சந்நிதானமறைக்குதாம் நீ ச

அநுபல்லவி.

நற்றவம் புரியும் நம்முடைய திரு
2 நாளைப்போவார் வந்திருக்கிறார் ச

சரணம்.

3 சாதிமுறைமை பேசுரான் தன்னையிகழ்ந்து யேசுரான்
கோதிலாத குணமுடையோன்
கோபங் கொண்டால் தாளமாட்டான் ச

2 வேதகுலத்தைப் போற்றுரான்
விரும்பி விரும்பி யேற்றுரான்

பூதலத்திலி வனைப்போல
புண்ணியபுருட ஞெருவனில்லை ச

3 பக்தியில், கரை கண்டவன்
பார்த்து பார்த்து வுண்டவன்
சித்தங் குறையின் நமது செல்வம்
முற்றுங்குறையுந் தயவுசெய்து ச

எஸ். வி. சுப்பையாபாகவதர் பாடிவருவது.

அருட்பா.

பணிந்தறியே னன்புடனே பாடுதலு மறியேன்
படித்தறியேன் கேட்டறியேன் பத்தியிற் பூமாலை
யணிந்தறியேன் மனமுருகக் கண்களினீர் பெருக
வழுதறியேன் தொழுதறியேன் அகங்காரஞ் சிறிதுந்
தணிந்தறியேன் தயவறியேன் சத்திய வாசகமுந்
தானறியே னுழுந்தடித்த தடியதுபோ லிருந்தேன்
துணிந்தெனக் கருள்செய்த துரையே யென்னுள்ளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்த சிகாமணியே.

நந்தன் சிவதரிசனஞ் செய்தபின் சொல் தரு.

இராகம் - மாஞ்சை, தாளம் - ரூபகம்.

நாளைப் போகாமலிருப் பேனே இந்த நா
நாற்றநரம்புமின்னஞ்சுமப் பேனே நான் நா
நாலுமுடலைக்கண்டுகளிப் பேனே நான் நா
நாளைவீணைக்கழிப் பேனே நான் நா
நமனுர்க்கஞ்சியோடியொளிப் பேனே நான் நா
ஞானத்தைப்பாராமலிருப் பேனே நான் நா
நாட்டிலிகழுஞ்சென்மம்படைப் பேனே நான் நா
நாதனைக்காணமல்புசிப் பேனே நான் நா

நந்தன் புலையர்களை அழைத்து சிதம்பர தரிசனம்செய்ய ஆசையுற்ற பக்தி மார்க்கங்களை போதிக்கும் தரு.

ஆனந்தக் களிப்பு.

காணுமலிருக்கலாகாது பாழுங்
கட்டைக்கடைத்தேற வேண்டியிருந்தால் காணு

1 முத்தியளித்திடும் பாதம் தில்லை
மூவாயிரம்பேர்கள் பூசிக்கும் பாதம்
சத்திக்கிணையான பாதம் வேத
சாஸ்திரங்கள் நாளுந்தேடிய பாதம் கா

2 காலனைச்சீறிய பாதம் சன
காதிகளுக்குள்ளே செலுத்திய பாதம்
மாலயன்தேடிய பாதம் எங்கள்
மாணிக்கவாசகர்பீடிகை பாதம் கா

3 ஆசையைப்போக்கிய பாதம் பர
மானந்தவெள்ளத்திலாடிய பாதம்
வாசம் பொருந்திய பாதம் தில்லை
மாகாளிதாழவே தூக்கிய பாதம் கா

4 பாலகிருஷ்ணன்தொழும் பாதம் காட்டில்
பாம்பும்புலிக்கூத்தாடிய பாதம்
கோலச்சிலம்பணி பாதம் தில்லை
கோவிந்தராயர் தரிசிக்கும் பாதம் கா

நந்தன் சொல் தரு.

இராகம் - நீலாம்புரி, தாளம் - ஜம்பை.

அஷ்டமாசித்திகளைப் பெறலாம் தில்லையி
லானந்தத்தாண்டவன் கோயிலைக்கண்டு
இஷ்டமுடன் வீதிவலம்வந்து ஈசன்
இணையடி தொழுதார்க் கினிப்பிறப்பில்லை
வாருங்கள் வாருங்கள் சொன்னேன் நீங்கள்

வாயாடாதோடி வருவீரென்முன்னே
கருமணிபிச்சோலை போதும் உந்தன்
கள்ளவேஷ மெங்களுக் குள்ளேகிடையாது
பருகுவதுகூழ்க்கஞ்சி போதும் வாய்
பதரிவார்த்தைகள்பேசிப் பசப்பாதேபோடா.

பெரிய கிழவன் நந்தனுக்கு சொல் தரு.

பல்லவி.

ஞாயந்தானா நீர் சொல்லும் ஓய் நந்தனாரே
நம்ம சாதிக்கடுக்குமோ

சரணம்.

1 சேரியிலில்லா வழக்கம் நீர்
செய்துகொண்டுவந்த பழக்கம் இந்த
ஊரிலெங்குமது முழக்கம் வெகு
உறுதியாச்சுது வொழுக்கம் இது ஞா

2 சிதம்பரமென்கிற பேச்சு நாங்கள்
செய்திடும் காரியம் போச்சு அது
மதம்பிடித்ததுபோ லாச்சு இந்த
மண்டலபறையருக் கேச்சு இது ஞா

3 பறையருக்கேதுதைப் பூசம் அதைப்
பார்க்கவேவுனக்குவிஸ் வாசம் சிறு
பயல்களுக்கேவுப தேசம் நீர்
பண்ணிவைத்ததெல்லாம் மோசம் இது ஞா

பெரிய கிழவனிடம் நந்தன் சொல் தரு.

இராகம் - தெண்டகம், தாளம் - ஆதி.

கண்ணிகள்.

சிதம்பரதரிசனங்காணாவிடிலிந்த சென்மஞ்சாபல்யமாமோ
செனனமரணசமுசாரம்பெருகவே செய்தவினைகள்போமோ

கண்ணுங்கருத்திருக்கசிவனைக்காணாமல் காலங்கழிக்கலாமோ
காலபாசம்நமதருகில்வாராமல் கண்டுபெயர்ந்துபோமோ

இப்படிஎப்போதுமிருப்போ மென்றெண்ணியிருக்கலாமோ
இருதயமரிந்திடசெய்திடுங்கன்மங்கள் இகழ்ந்துபிரிந்துபோ

பின்னுமுன்னுமறியாதமூடர்கள் புத்திகேழ்க்கலாமோ [மோ
புலையரவரடியிலிருக்கினுமெய்திடும் புண்ணியங்கள்போமோ

பரமசிவனைக்கொண்டாடவேணுமென்று பரிந்துபாவிபார்த்தே
பாபஞ்செய்பவர்க்குப்பலியாதுஅதில் பாடுபட்டுபார்த்தேன்[ன்

பெரிய கிழவன் சொல்.

விருத்தம்.

கழனியைத் தெய்வமெனச் சுற்றிவந்து தலைவணங்கிக் கரங்குவித்து, உழுதுபரம்படித்து விரைதெளித்து முளைகொள்ள நீரோடவிட்டுப், பழுதறவே நட்டதனைக் களைப்பிடுங்கி மடைதிறந்து நீர்பாயவிட்டுச், செழுத்திடவே பொங்கலிட்டு காத்தவராயனை வேண்டுஞ் செய்கை தானே.

பெரிய கிழவனுக்கு நந்தன் சொல் தரு.

இராகம் - தெண்டகம், தாளம் - ஆதி.

மீசைநரைத்துப்போச்சே கிழவா ஆசைநிறைக்கலாச்சே
பாசம்வருகலாச்சே கிழவா பாவம்விலகிப்போச்சோ
கூனுகுறுகிப்போச்சே கிழவா கோபம்விலகிபோச்சோ
அங்கம்தளர்ந்துபோச்சே கிழவா ஆங்காரமும்போச்சோ
சேரியைமறந்தாயே கிழவா சிதம்பரம்நினைந்தாயோ
மானிடஜென்மமடா கிழவா மாண்டால்வருமோடா
அம்பலத்தரசனடா கிழவா ஆளுந்தெய்வமடா
திருவடிபணியாயோ கிழவா தேடித்தெளியாயோ

விருத்தம்.

இப்பவோ பின்னையோ சற்று நேரத்திலோ
இரவுதான் படுநேரமோ யிரவிலோ பகலிலோ
உதயகாலத்திலோ எந்தெந்தவேளைதனிலோ
அப்பிலோ தீயிலோ நாயிலோ பேயிலோ
அரவுதான் பெறமிடியிலோ ஆறுதபுண்ணிலோ
நடநோய் தன்னிலோ ஆயுதங்களினலையோ

செப்பரிய வீட்டிலோ காட்டிலோ யென்னுயிர்
பிரிந்திடும் நடராஜனே.

பெரியகிழவன் நந்தன் மகிமையை புலையர் களுக்கு சொல் தரு.

பெரியகடுக்கா.

பல்லவி.

திருநாளைப் போவாரிந்தச் சேரிக்குமூருக்கும்
யாருக்கும் பெரியவன் திரு

அநுபல்லவி.

ஒருதரமாகிலுஞ் சிவசிதம்பரமென்று
உரைத்திடீரென்றிவ் வுண்மைகூறிய திரு

வண்ணம்.

அடாது செய்தால் படாதுபடுவீர் விடாதுபாவந் தொடாதே அவன் பேரிடாதே தூறுபடாதே கைபிடி படாதே வெம்பகையிடாதே அப்பா திடங்காண் கோபப் படாது பட்டால் விடாது சலம்படாதவன் பயப்படாத வன் இடங்கொடாதவன் அடங்கிடாதவன் நிலைவிடாத வன் மறுபடாதவன் மனம் விடாதவன் அடங்கிடாத வன் விடைய வலைப்படான் மாய்கைக்ககப்படான் சிவனை யிடைவிடான் கழனிகளைநடான் கலப்பைகளை தொடான் நமது வழிப்படாது பொலிகிடாரி எல்லைப்பிடாரி வெல் லப்படாது சொல்லப்படாது கல்லைப்படாது தள்ளப் படாது யாரையும் விடாது துன்பந்தொடாது வழியைத் தேடாது இருவினைப்படாது சென்மங் கெடாது தெய் வங் கெடாது அவன்கைவிடாது வேறுபடாது ஆசைப் படாமல் அருளைக்கொடாது பங்கப்படாத தங்கக்கடா ரம்பொங்கப்படாதவன் இணையிலாத புண்ணிய தடாகஞ் செய்தவன் மடாதிபதி பிடிபடாத சிங்கம் அளவுபடாத மகிமைவிடாத பெரியவனடா தெரிசனப்படாத சந்நிதி விடாத நந்தி யசைந்ததேனடா அரன்விலகடா வென்று

சொல்லடா அவனைப்பணியடா துளையணியடா அறிந்து போற்றடா கையெடுத்தேத்தடா மலரைத் தூற்றடா மனதைத் தேற்றடா பிறவிமாற்றடா ஆனந்தக்கூத்தடா சொன்னேன். திரு

பெரியக்கிழவன் சொல்லக்கேட்ட புலையன் துக்கித்து சொல் தரு.

இராகம்-புன்னுகவராளி, தாளம் சாப்பு.

பல்லவி.

நாம் என்னசெய்வோம் புலையரே-இந்தப்
பூமியிலில்லாத புதுமையைக்கண்டோம் நாம்

அநுபல்லவி.

1 நந்தனொருவனாலேயிப்படி யாச்சு
நன்மையுந்துன்மையுமில்லாமற் போச்சு
சந்நிதிக்குச் சந்நிதிகூத்தாட லாச்சு
சாமியுமில்லாமல் எங்கேயோ போச்சு நாம்

சரணங்கள்.

2 கன்னற்கற்கண்டவ் வார்த்தைகேட் பாரோ
காதிற்பட்டாலதைக் கருத்துட்கொள் வாரோ
மன்னூர்சாமிக்கும் பூசைபோட் டாரோ
மாரியாத்தாளங்கே மறைந்திருக் கிறளோ நாம்

3 சேரிக்குள்பதினொரு பேர்களுங் கெட்டார்
செய்யுந்தொழில்முறை யாவையும் விட்டார்
ஊருக்குப்பெரிய கிழவனுட் பட்டார்
உண்மையறியாமற் சிதம்பரந் தொட்டார் நாம்

புலையர்கள் வேதியரிடம் சொல் நொண்டிச்சிந்து.

இராகம்-பைரவி, தாளம்-ஆதி.

ஐயேயொரு சேதிகேளும்-உங்கள் அடிமைக்காரப்
பறைய னடத்தையெல்லாம், வரவரக்கெட்டுப்போச்சு
சேரியில்-வழக்கமில்லாதபடி பழக்கமிட்டான், குடி
யிருக்கமாட்டோம் எப்போதும் கூக்குரல்போடுகிறு
ணுக்கமரந்தே, இருப்பானொருவேளை-பொல்லாத-ஏக்க
மடைந்தவன்போல் நாக்கைவளைத்துச், சிரிப்பானொரு
வேளை-தில்லைச்-சிதம்பரமென்றுசொல்லி மதம்பிடித்தே,
அழைப்பானொருவேளை எங்களையும் அண்ணேன்வா
வென்றுசொல்லி கிண்ணாரங்கொட்டி, குதிப்பானொரு
வேளை திக்குமுக்கல் கொண்டவன்போ லெதையோ
கண்டவன்போல், களிப்பா னொருவேளை-மரம் போலே
கையசைக்கல் காலசைக்கல் மெய்யசைக்கலும், இருக்கா
னொருவேளை-தாளம்போட்-டெக்கொலிகொட்டியே குடி
சைக்குட் புகுந்து, பேசானொருவேளை-கண்டதெல்லாம்
பிரட்டென்றுசொல்லுவான் முரட்டுத்தனம், மன்னாறு
சாமிபோலே-கிளம்பி-வாய்விட்டலறுங்குர லாரெட்டுமே
ஐயோ சிவனேயென்பான் கீழே புரண்டழுவானியாரை
யுந் தொழுவானே, தூண்டிமீனதுபோலே-துள்ளிதுள்
ளித் துடிப்பான்பற்களைக் கடிப்பானே, சிவனென்று
மூன்றுதரம் நாங்களுஞ் செப்பவேணுமல்லாவிடில் வம்பி
லுதைப்பான், கோவிலிற் போவோமென்பான்-எங்களை
யும்-கும்பிடச்சொல்லியில்லா வம்புபண்ணுவான், சுற்றி
வரச் சொல்லியடிப்பான் சிவன்பேரைச் சொல்லடாசந்
நிதியில் நில்லடாவென்பான், சொல்லித்துலைக்கவேணும்
இல்லாவிடில்-சுக்குமாந்தடி கொண்டு நொக்கிவிடுவான்,
கொம்பேறி மூக்கன்போல-முதுகினில்-குத்துவான் புலி
போலே கத்துவானே, இதுவென்னகாரணமோ-எங்க
ளுக்-கீனமாயிருக்குது மானமல்லவோ, கறுப்பண்ண
சாமிதானோ இருளன்-காட்டேரியோ வீரனிவன் வீட்
டேரியோ, பாவாடைதுரைதானோ-ரணபத்திரகாளியோ

வுன்மத்தவீரனே, பூசைகள் போட்டுபார்த்தோம் ஒன்றினும்-போவதில்லைகாரிய மாவதில்லையே, எங்கள் வள்ளுவரைக்கேட்டோம் அவர் யெடுத்துச்சொன்னரிதை விடுத்துச் சொன்னர், மயான உருத்திரனர்-பிடித்து வாட்டுதடா இப்படி யாட்டுதடா, தெளியாதென்று சொன்னர்.

புலையர்கள் சொல் தரு.

இராகம்-கன்னடா பியாகு, தாளம்-ஆதி.

பல்லவி

சேதிசொல்லவந்தோம் நந்தனர்
சேதிசொல்லவந்தோம்

அநுபல்லவி

சாதிமுறைமைதெரி யாதவனுமக்குத்
வாதவனென்றொரு மாதமாய்செரிந்து சே

சரணங்கள்.

1 ஏரைப்பிடித்துசற்றே உழுவான் மன
தேங்கித்தள்ளாடியே விழுவான் எங்கள்
சேரியைப்பார்த்தே யழுவான் சிவ
சிதம்பரமென்றே தொழுவானேயே சே

2 நாத்துமுடியைகையி லெடுப்பான் அதை
நடத்தெரியாமலே விழிப்பான் இதைப்
பார்த்திடும்பேர்களைப் பழிப்பான் அடே
பாவியென்றெங்களை யடிப்பானேயே சே

3 உதட்டையசைத்துமுணுமுணுப்பான் அவன்
ஊணுறக்கத்தையுந் துறப்பான் அவன்
அதட்டிபேசின லடிப்பான் பொன்
னம்பலவாணனைப்படிப் பானையே சே

வேதியரிடம் புலையர்கள் சொல் தரு.

இராகம்-கமாசு, தாளம்-ஆதி.

பல்லவி.

அடிக்கியாளுமையே இவனை அடக்கியாளுமையே

அநுபல்லவி.

அடக்கியாளுமிந்தத் துடுக்குக்காரனிவனை
அடித்துப்பிடித்துக் கண்டித்துப்படபடத்து அ

சரணம்.

1 பொன்னம்பலவாண னென்றிவன் பேசி
பொழுதைப்போக்குவான் சாம்பலைப் பூசி
சன்னதங்கொண்டவன் போலவே வாசி
சண்டைபிடிக்கவருவா னிவன் தோசி அ

2 பலித்துறையேவொரு மந்திரம் போட்டான்
பழமையானயினிதங்களை கூட்டான்
குலத்தைக்கெடுக்கவந்திவனொரு கோட்டான்
கோபக்காரனெங்கள் வழிப்பட மாட்டான் அ

3 குளத்தைவெட்டச்சொல்லிக்கூலியைக் கொடுத்தான்
கூட்டிக்கொண்டுபோய் பயல்களைப் கெடுத்தான்
களத்தைச்சீக்கவே யெங்களை விடுத்தான்
காடுமண்டிவரும் சுடலையிற் படுத்தான் அ

வேதியர் புலையர்களுக்கு சொல்.

விருத்தம்.

காலமே வந்தானிங்கே கள்ளக்கும்பிடுகள் போட்டு
பாலனைப்போலேபேசிப் பசப்பினன் போடாவென்றேன்
வேலைகு ழூலகிலந்த வீணனைப்போலே காணேன்
சீலமாஞ் சிதம்பரத்தைச் சேரவே விடைகொடேனே.

நந்தன் சொல் தரு.

இராகம் - கௌளிபந்து, தாளம் - ஆதி.

பல்லவி.

நமக்கினி எமபயமேது தில்லை நடராஜனிருக்கும்போது நம

அநுபல்லவி.

மார்க்கண்டருக்காக மறலியையுதைத்திட்ட
மான்மழுவேந்தும் மகாதேவனிருக்க நம

சரணங்கள்.

1 இம்மை மறுமைமுத லியாவுக்கும்பரமான
சின்மயானந்தரூபச் சிவபெருமானிருக்க நம

2 அரியயனமரரும் ஆலங்கண்டஞ்சமுன்
பரிவுடன்வரக்காத்த பரமசிவனிருக்க நம

3 திருவிக்கிரமனுய்வரும் திண்மாயன்மமதையை
விரிவுகங்காளனுகி விலக்கும்பரனிருக்க நம

4 ஆதிசேடனுமானு மலரோன்மிலக்குமியும்
காதலாய்த்தவஞ்செயக் கழித்தபரனிருக்க நம

5 இரணியனுல்வெறி கொண்டநரசிம்மனை
தரணியில்ரக்ஷித்த சங்கரனிருக்க நம

நந்தனுக்கு வேதியர் சொல் தரு.

இராகம் - தெண்டகம், தாளம் - ஆதி.

சேரிமுற்றுஞ்சிவ பக்திபண்ணும்படி
விட்டையாம் மடியிட்டையாம்
சேதிசொல்லவேணு மென்றிங்கே நீ
வந்தையோ அகமகிழ்ந்தையோ
காலைமாலையில் வந்துதெரிசனங்
காட்டுகிறுய் நிலை நாட்டுகிறுய்
கதறினுலுமூர்க் குருவிகருடன்போ
லாகுமோ வதிவேகமோ

அடிமைவேலைசெய்யு முனக்கிந்தக்கொண்
டாட்டமோ ஜென கூட்டமோ
அடக்கியாளமாட் டேனேசிங்தக்குட்டி
யல்லவோ அதைச்சொல்லவோ
கானிபூசையவர் போடும்போது நீ
கண்டித்தையாந் தெண்டித்தையாம்
கபடமெல்லாம்வெளிப் படுவதாகவழி
காட்டுறேனிதை நாட்டுறேன்.

நந்தன் சிதம்பரத்தைபற்றி வேதியர்குறைத்து உத்திரவு கேட்பது.

S. V. சுப்பய்ய பாகவதர் பாடி வருவது.

இராகம் - கரகரப்ரியா.

விருத்தம்.

ஜாதிகுலப்பிறப்பென்னும் சந்தேகம்தெளியாது தானகிற்கும்
பேதகுணம்பற்றறுத்துப் பேரின்பம்வருஷித்துப் பேணிக்காக்
ஆதிபராபரமெனும் திருச்சிற்றம்பலத்தை கண்டானந்திக்க[கும்
வேதமொழிவிளங்கிவருந் திருவாயால்விடைகொடுக்க வேண்
[டுண்மயே

நந்தன் சொல் தரு.

இராகம்-உசேனி, தாளம்-ரூபகம்.

தில்லையம்பலத் தலமொன்	றிருக்குதாம் கண்டபேர்க்கு
சென்மமான பிணியைக்	கருக்குதாம்
உயருஞ்சிகரக் கும்பந்	தெரியுதாம் பார்த்தவர்க்கு
உள்ளங்குளிரக் கருணை	புரியுதாம்
பண்ணவராயன் மாலுந்	தேடுமாம் தில்லைக்காட்டில்
பாம்பும்புலிக்கு நிர்த்தன	மாடுமாம்
அரியபிரமனெழுத்தைத்	தள்ளுமாம் ஆரையுமது
வானந்தமுழுக்காட்டிக்	கொள்ளுமாம்

போய்வருபவர் புண்ணிய சாலியாம் தருமராஜன்
புரத்தில்பழுது வந்து சேலியாம்
உருவில்லாத குருவொன் றிருக்குதாம் மூலக்கனலை
ஊதியெழுப்பிக் காணப் பெருக்குதாம்
உருவமாகி வெளியே வருகுதாம் நான்மறைக்கு
முணர்வில்லாத காட்சி தருகுதாம்
போய்வருக வுத்தாரந் தாருமே பொன்னடிதாள்
போற்றுவேன் கண்ணாலே பாருமே தில்லை

அந்தணர் நந்தனுக்கு சொல் தரு.

இராகம்-லாவணி, ஆதி-தாளம்.

பல்லவி.

பறையா நீ சிதம்பரமென்று சொல்லப்
படுமோடா போகப்படுமோடா அடா பறை

அநுபல்லவி.

அறியாத்தனமினி சொன்னாலினிமே
லடிப்பேன்கூலியைப் பிடிப்பேன் பாவிப் பறை

சரணம்.

சிதம்பரமென்பதை விடு கொல்லைச்
சேரடியிலேவந்து படு நாத்தைப்
புதத்திற்பிடுங்கி நடு கறுப்
பண்ணனுக்கேலி கொடு அடா பறை

எப்போதுமொருதடி பிடி கையி
லெடுத்துகொண்டேதமுக்கடி உள்ளங்
கற்பனையாய்ப்பள்ளு படி கால்
நோகாமலேகாடியைக் குடி அடா பறை

கள்ளந்திருதற்குப் பாரு உன்
கால்படும் பண்ணையிற்வீற்றிரு இது
சொன்னதுமில்லையா வுன்குரு நீ
சுகமுடன்வாழ்ந்துகொண்டிரு அடா பறை

நந்தன் அந்தணரை விடைகேட்குதல்.

இராகம்-தேசிகதோடி, தாளம்-ஆதி

கண்ணிகள்.

1 உத்தாரந்தாருமையே கொருவருமில்லை — எனக் பரகதியடைய உ-
2 வித்தைகள் கற்றது பத்தியிற்சென்றது — மில்லையானொரு பரகதியடைய உ
3 குற்றங்களைத்தனை அத்தனையும்பொருத் — கொடியேன்செய்தேன் தாதரவாக உ
4 பெண்டுபிள்ளையென்று கண்டுகளித்துக் — பேயனைப்போலவே காலங்கழித்தேன் உ
5 தில்லைச்சிதம்பரத்தை யெல்லையைக்கார்த்துக்கொண் — தெரிசித்துவந்துங்க டிருக்கிறேனையே உ

வேதியர் நந்தனுக்கு சொல்.

விருத்தம்

புத்திசொல்லி கேளாத மூடாவுந்தன்
புரட்டெல்லாம் நானறிவேன் போடா போடா
பத்தியென்றுஞ் சித்தியென்றும் பறையர்க்கேது
பார்ப்பார தெய்வமது பாலிக்காது
குற்றமுண்டுன் சாதியிலே வழக்கமில்லாக்
கொள்கையது சேரியிலே கூடாதப்பா
பித்தமது கொண்டவன்போ லிங்கேவந்து
பேசாதே போய்நின்று வேசுவேனே

நந்தன் சொல்.

அறுசீரடி விருத்தம்.

வேதியரே பெரியவரே நல்லவரே நான் கடையேன் விண்ணோர் மெச்சும், சாதியரே பலகலையுங் கற்றுணர்ந்து புரையில்லாத் தவமே செய்யும், போதியரே பக்தியில்லா நான்புலையனேதறியேன் புண்யமூர்த்தி, ஆதிகுரு சிதம்பரத்தைக் காணவென்றே யாசைகொண்டேன் அனுப்புவீரே.

வேதியர் சொல் தரு.

இராகம் - முகாரி, தாளம் - ஆதி.

பல்லவி.

சிதம்பரதெரிசனமாநீயதைச் சிந்திக்கலாமோபறையா சி

கண்ணிகள்.

1 சிதம்பரதெரிசனஞ் சதுர்மறையோர்கள்
செய்வதுஞாயம் நீ சொல்வது மாயம்
சொல்லாதே இங்கே நில்லாதே
சேரிக்குப்போடா நாளைக்குவாடா சித

2 சனகமகாமுனி யோகிகள்தேடிய
கனகசபேசனை கண்டறிவாயோ
பேசாதே கை வீசாதே
வீரனைத்தொழுடா ஏரதைஉழுடா சித

3 தவமுடையோர்கள் தரிசிக்கும்மந்திரம்
சிவபதமென்று சேவிக்கலாமா
ஆகாது வினை போகாது
விரைதெளியன்றோ அறுதலிமகனே சித

நந்தன் சொல்.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

மனங்கண்ட விடமெல்லாம் போகாம லாணையிட்டு மறித்துவாங்கி, அனல்கண்ட மெழுகதுபோ லெனதுள் ளந் தனதாக வருகிச்சாய்க்கும், புனல்கொண்ட வேணி யனைப் புண்ணியனைப் புராந்தகனைப் போற்றிசெய்யக், கனல்கொண்ட தில்லைநகர் போய்வருவேன் கருணைவழி காட்டுவீரே.

அந்தணர் சொல்.

விருத்தம்.

கதிரொரு முழுமேநீளுங் கட்டுமுக் கலமேகாணுந்
துதிபெறு நந்தாவுன்கை தொட்டதே தங்கமாகும்
வதிதனிற் பெருமைசொல்லும் பறையனு மிருந்துந்தில்லை
சிதம்பரபித்தேதன்கொண்டாய்செய்தொழிலேதென்றாரே

நந்தன் சொல்.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

பித்தமது தெளிந்துவிட மருந்துண்டு தில்லைவனம் பேணிச் சென்று, சத்துசிவ காமிப்பெண் சந்நிதியி னோராகித் தலைவணங்கி, தித்தியென்று நடனமிடுந் திருக் கோலங் கண்குளிரத் தெரிசித்தானல், பித்தமது தெளிந் துவிடும் வேதாந்த மழை சொரியும் பெரியகோவே.

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஆதி.

பல்லவி.

பித்தந்தெளிய மருந்தொன்றிருக்குது
பேரின்ப மன்றுள்ளே (பித்)

அநுபல்லவி.

மற்ற மருந்துகள் தின்றுலு முற்றுக்கு
வல்லே வல்லே ஐயே அடிமை (பித்)

சரணம்.

பாம்பும்புலியும்மெய்ப் பாடுபட்டுத்தேடி
பார்த்து பயிரிட்டது—அந்த
பாரளந்ததிரு மாயனும்வேதனும்
பார்த்து களித்ததுண்டு
பார்வதியென்றொரு சீமாட்டியதில்
பாதியைத் தின்றதுண்டு—இன்னம்
பாதியிருக்குது பறையாநீபோய்
பாரென்றுத்தாரம் தாரும் தாரும் (பித்)

வேதியர் சொல்.

விருத்தம்.

நாற்பது வேலிபூமி நடவுநட் டாகவில்லை
பார்ப்பது மில்லைசைவப் பழமது தின்றுப்பண்ணை
காப்பது மில்லையுன்னைக் கைவிட மனதுவல்லை
சேர்ப்பதா லாவதில்லைச் சேரியிற் றுலைந்துபோடா

நந்தன் வேதியருக்கு சொல் தரு.

இராகம்-பியாகு, தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மார்கழிமாதந் திருவாதிரைநாள் வரப்போகுதையே
மனதைபுண்ணுகபண்ணுமலொருதரம் போய்வாவென்றுசொல்
கட்டையிருக்கையில் சிதம்பரம்போய்நான் காணவேணுமையே
கசடனுகிலும் ஆசைவிளையுதன் காலுக்குகும்பிடையே
காவில்நகமுளைத்தநாள் முதலாயுமக் கடமைக்காரனேயே
காலபாசத்திற் காட்டிக்கொடாமல் காப்பாற்றிடுமையே
உள்ளங்காலில் வெள்ளெலும்பாட வோடியுழைத்தேனேயே
உண்டதுமுறங்கின தன்றியில்வேறே ஒன்றுங்காணிலியே
எட்டுமிரண்டு மறியாதபேதை யெளியேனுனேயே
இன்னந்தாய்வயிற் றிடையணுகாம விடங்காட்டிடுமையே
வெள்ளைவெளுத்திடும் தண்ணீர்குடித்திடும் வெறியனுனேயே
மேதினியினி னுயினுங்கடையேன் வழிவிடவேணுமையே
தானந்தவங்க ளொன்றுங்காணு தடியேனுனேயே
தளரவிடவேண் டாமொருகோடி தருமமுண்டு ஐயே
அல்லும்பகலுங்களாதரவாலே ஆளாகினேனேயே
அன்புடனேநல்ல கதிபெருவாயென் றனுப்பவேணுமையே

வேதியர் நந்தனுக்கு சொல் தரு

இராகம்-முகாரி, தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மாடுதின்னும் புலையா வுனக்கு மார்கழி திருநாளோ
தேடியெடுத்து தாயாரிடத்தேபோய் திண்டாதேபோடா
ஆடுதின்னும் புலையா வுனக்கு ஆனித்தரிசனமோ
நாடுசிரிக்கும் வார்த்தைகளன்றோ நாடாதேபோடா
நண்டுக்குக் கலியாணம் உளளோ நரிக்குச்சங்கராந்தி
பண்டிக்குப்பூசை திருநாளுண்டோ பறையா நீ போடா

பூசைகள்செய்வாயோ ஆண்டவன்பொற்கடிதொழுவாயே
கூசல்போடாதேபோடாயிங்கேகூழைக்கும்பிடலாகாதே
கங்கையிலாடுவையோ அங்கேகாணிக்கைபோடுவையோ
இங்கிதமறிவே னடிக்கடிவந்து வுரையாதேபோடா
ஐந்தெழுத்தோதுவையோவுனக்கு ஆனந்ததிருக்கூத்தோ
வஞ்சகவார்த்தை நாளைத்தெரியும் வாராதேபோடா

வேதியர் சொல்லக்கேட்ட நந்தன் மனம் துக்கித்து சொல் தரு.

இராகம்-எதுகுலகாம்போதி, தாளம்-திரிபுடை.

கண்ணிகள்.

1 ஐயோ தெய்வமேயிந்த வையர்க்கடிமையானேன்
செய்யா வினைகள் செய்தல்லவோ அம்பலவாணு தென்
செய்யாவினைகள் செய்தல்லவோ [புலியூரான்

2 உள்ளங்கரைந்துருகி யுய்யும்படிக்கேட்கில்
கள்ளக்குமரனல்லவோ அம்பல
கள்ளக்குமரனல்லவோ

3 ஆலைக்கரும்பதுபோ லாச்சுதங்கமுழுதும்
வேலைக்கிடமில்லையே அம்பல
வேலைக்கிடமில்லையே

4 பாவியெனக்கோவந்த பார்ப்பான்மனதிரங்கான்
ஆவிதவிக்குதல்லவோ அம்பல
ஆவிதவிக்குதல்லவோ

5 கோவில் கும்பத்தைக்கண்டால் கோடிவினைகள்தீரும்
பாவிக்குக்கிடையாதுகாண் அம்பல
பாவிக்குக்கிடையாதுகாண்

6 தில்லையம்பலவாணா தெய்வம்புலையர்க்காக
கல்லாய்சமையலாச்சுதே அம்பல
கல்லாய்சமையலாச்சுதே

7 பொன்னம்பலவாயுன்னைப் போற்றும்வகையில்லாமல்
இன்னம்பிறவியேறுமோ அம்பல
இன்னம்பிறவியேறுமோ

8 அன்னை தந்தையும்நீயென் னுவிபொருளும்நீயுன்
சந்நிதிவரச்செய்வாயே அம்பல
சந்நிதிவரச்செய்வாயே

வசனம்.

நந்தனார், தில்லைத் தலத்தைக் காணாதசென்மமிருந்தாலென்ன போனுலென்னவென்று நிச்சயம்பண்ணி மனதுருகிவாடும் வேலையில் கொஞ்சம் நித்திரைபோற்கண்டு அந்நித்திரையில் அம்பலத்தேவன் சொல்லல்.

பொது விருத்தம்.

அறிவுமிகுந் தாற்றலுடன் சிவபெருமான் பெயர் சொல்லி யாற்றுநாளில், கறைமருவுங் கடரழகன் றனதடிமை வெறியகலக் கனவில்வந்து, குறையறவே கழனிகளை நடச்சொன்னேமுனக்குவிடைகொடுக்கேனென்ற, மறையோதுமவர்க்குரைத்து நீவிரைந்து வாவென்று மன்றுட் சென்றார்.

நந்தனார் நித்திரை நீங்கி வயல்களைக்கண்டு சந்தோஷ மடைதல்.

நந்தன் சொல் தரு.

கண்ணிகள்.

களையெடாமல் சலம்விடாமல் கதிரொருமுழங் காணுமாம்
களிக்குதுபயிரிருக்குது அதை கட்டுகட்டவேதாணுமாம்

பழுதிலாம லேரிகுளங்கள் பள்ளமேடு தண்ணியாம்
பரமசிவனைப் பணியும்நந்தன் பயிரிடுந்திருப்பண்ணையாம்

கனவில்வந்து வுருவமாரி கருணைமாரி கண்டவன்
கடுகிநடந்து வேதியரிடங் காணவென்று சென்றனன்

பொது விருத்தம்.

அய்யரேவாருமென்று அழைத்திடும்நந்தனைத்
துய்யவேதியருங்கண்டு தொல்புவிதெய்வமெல்லாம்
பொய்யிதுவென்றுதள்ளிப் புலையனும்வந்தானென்று
செய்யவேண்டியதுசெய்யச் செப்புவாரனைப்புவானே.

வேதியர் சொல் தரு.

இராகம்-வராளி, தாளம்-ஆதி.

பல்லவி.

நந்தாவுனக் கிந்தமதி வந்ததென்ன தந்ததாரடா

அநுபல்லவி.

அந்தரங்கஞ்சொந்தமா யிருந்ததுமறந்துபோய்
விந்தையாய்நினைந்ததன்றோ அந்தவேளைபுத்தியில்லை நந்

சரணங்கள். தோடி.

கொல்லைக்காட்டுநரிபோல பல்லைக்காட்டிபேசுராய்
கல்லைக்காட்டிகோபங்கொண்டு சொல்லைக்காட்டியேசுவேன்
இல்லையென்றுசொன்னதெல்லா மில்லையென்றுபோச்சுதா
கல்லையென்றுஐயர்சொன்ன சொல்லேநிஜமாச்சுதா
சித்தமுந்தெளிந்ததா உற்றதுவுணர்ந்துதா
பத்தியுந்துலைந்துதா கத்தலும்பறந்துதா
சட்டம்சட்டம் நல்லதுநல்லது மெத்தமெத்த சந்தோஷம் நந்

மத்தியமாவதி.

இப்படிஅப்படிசொல்லாதே தப்பெடுத்தடுப்பையா
சொற்படியொப்புதலாகநீ மெய்ப்படிநடிப்பையா
கள்ளக்கும்பிடுந்தள்ளடா காரியங்கைகொள்ளடா
எள்ளுகொல்லைக்காரடா யெங்குஞ்சுற்றிப்பாரடா
தெய்வமென்பதுகுற்றம் தெளிந்துபாருஞ்சுற்றம்
கைகைக்கொட்டுசத்தம் கண்டுகொள்ளுநித்தம்
ஊனுறக்கமேயின்பம் ஊனிழந்தாலேதுன்பம்
சாண்வயிற்றுக்கு அன்பு சாதிமுறைமைவம்பு
ஒகோ பலே பலே சபாசு கண்டுகொண்டாய் ந

பொது வசனம்.

இவ்விதம் சொல்லி கடுகடுத்த வேதியரைக் கண்டு வாரும் சுவாமி பண்ணையை பாரும் உத்தாரம் தாருமென அழைத்த நந்தன் பிரகே சென்று கேவலமாகிய நீசன் சிவ கணங்களாலே ஒரு இராத்திரியில் நடவுநட்டு அறுப் பறுக்கும் வயலைக் கண்டு ஒன்றும் தோன்றாதவராய் மதி மயங்கி நந்தனைக் கண்டு.

வேதியர் சொல் தரு.

இராகம்-ஆனந்தக்களிப்பு.

நந்தாநீசிவ பக்தன் உன்னை
நம்பாமலே மோசமானேன் பித்தன் நந்

1 பொங்கி மகிழ்ந்தானே அத்தன் இந்தப்
பூமிக்குநானொரு சாஸ்திரப்பிர சித்தன்
பூமிக்குள்ளேவெகு மத்தன் உன்னைக்
போற்றிதெரிசித்தோரனைவரு முத்தன் நந்

2 படித்துமென்னவெங்கள் வேதம் அதில்
பார்த்ததில்லையிந்தபகவனற் கீதம்
எடுத்துச்சொன்னாய் சிவ போதம் அது
ஏற்காமற்போச்சுதுயென்பிடி வாதம் நந்

3 தெவிட்டாதசோகம் பாணி உந்தன்
தேகமுழுதிலுஞ்சிவன்றிரு மேனி
பகையாகியவொரு கூனி போலே
பழுத்தேனானுநீயாற்றும் ஞானி நந்

4 பவசாகரந்தாண்டிச் சென்றாய் உள்ளே
பார்த்துணர்ந்துப்பரமானந்தங்கொண்டாய்
தவமாமுனிபோலே நின்றாய் தில்லைத்
தாண்டவராயனைக்கண்ணால்நீ கண்டாய் நந்

வேதியருக்கு நந்தன் சொல் தரு.

இராகம்-பைரவி, தாளம்-ஆதி.

பல்லவி.

ஆருக்குப்பொன்னம்பலங்கிருபையிருக்குதோ
அவனே பெரியவனும்

அநுபல்லவி.

பாருக்குள் வீடுகள் மாடுகளாடுகள்
பணமிருந் தாலவன் பெரியவ னவனே ஆரு

சரணங்கள்.

1 வேதபுராணங்க ளோதினதாலென்ன
வேலைசூழ்பணி மாதராலென்னகாரியம்
சாதனையாகவரா தொருநாளும்
மண்ணாசைபெண்ணாசைபொன்னாசை பொல்லாது ஆரு

2 பாணன்மதங்க ளடங்கவே செய்தகோ
பாலகிருஷ்ணன் தினந் தொழும்பொன்னம்பல
வாணனென்றுதர வாய்விரும்பாதவன்
வானவராகிலுந் தானவன் சின்னவன் ஆரு

வேதியர் நந்தனுக்கு சொல் தரு.

இராகம்-தண்டகம், தாளம்-ஆதி.

பல்லவி.

நந்தாநீ குருவுபதேசம் நவிலிடவேணும் நான்கடைத்தேற

அநுபல்லவி.

நந்தானுன் கதிபெற மாட்டேன்
நோயினும்பிறவிக் கடலிடை வீழ்வேன் நந்

சரணங்கள்.

மந்தாரப்பூவெடுத் தானார்மலரடி சாத்திவாழ வென்னறிவு
சிந்தாமல்வரந்தர வேணும்சிதம்பர ரகசியந் தெரிசித்திடவே ந

வைத்தாகருணைக் கடலின் மனதிற் சென்றுநீ நிர்தனம்புரிந்து
ஒத்தாசைபூதகணங்களுரிமையுடன்வந்து ஊழியஞ்செய்ய ந

பெற்றுநீபெரியவனுந்தன்பெருமையைநானறிவேனுமூடன்
சுத்தாமல்மோசமதானேநம்பிக்கைசொன்னேநற்கதிபெரவே ந

வேதியரிடத்தில் நந்தன்சொல் தரு.

இராகம்-புன்னாகவராளி, தாளம்-ஆதி.

பல்லவி.

ஐயேமெத்தகடினம் உனக்கடிமை ஐயேமெத்தகடினம்

அநுபல்லவி.

பொய்யாதபொன்னம்பலத் தையாயிருக்குமிடம்
நையாதமனிதர்க்கு வுய்யாதுகண்டுகொள்ளும் ஐ

சரணம்.

வாசியாலேமூலக்கனல் வீசியேசுழன்றுவரப்
பூசைபண்ணிப்பணிந்திடு மாசறக்குண்டலியைவிட்
டாட்டுமே-மநமூட்டுமே-மேலோட்டுமே-வழிகாட்டுமே இந்த

மானாபிமானம்விட்டுத் தானாகிநின்றவர்க்குச்
சேனாதிபதிபோலே ஞானாதிபதியுண்டு
வருமே-கட்டிக்காருமே-உள்ளேசேருமே-அதுபோதுமேஅங்கே

சங்கையறவேநின்று பொங்கிவரும்பாலுண்டு
அங்கமிலேப்பாரிக்கொண்டுதங்கபொம்மைபோலுமே[மே
நில்லுமே-ஏதம்செல்லுமே-ஞானம்சொல்லுமே-யாதுவெல்லு

இந்தஅட்டாங்கம்பண்ணினாலும் நெட்டாங்குபண்ணியது
கிட்டாது கிட்டிவர வொட்டாது முட்டியது
பாயுமே முனைதோயுமே அதுவோயுமே உள்தோயுமே வேத

மந்திரத்திலேபோட்டு யெந்திரத்திலேபார்க்குந்
தந்திரத்திலேயுமில்லை அந்திரத்திலே அவ
தானமே-அது தானமே-மவனேமே-பேசாமோனமே அந்த

முப்பாழுந்தாண்டிவந்து அப்பாலேநின்றவர்க்கு
இப்பார்வைகிடையாது அப்பாதிருநடனம்
ஆடுவார்தாளம்போடுவார்அன்பர்கூடுவார்இசைபாடுவார் இதை

கண்டாருங்கிடையாது விண்டாருஞ்சொன்னதில்லை
அண்டரண்டகோடிஎல்லா மொன்றாய்சமைந்திருக்கு
மல்லவோ-பறையன்சொல்லவோ-அங்கேசெல்லவோ-நேர
மாகுதல்லவோ

பாலகிருஷ்ணன்பணிந்திடும் சிலகுருசிதம்பரம்
மேலேவைத்தஆசையாலே காலனற்றுபோவனென்று [ண்டு
சாத்திரம்-நல்லக்ஷேத்திரம்-சற்பாத்திரம்-ஞானநேத்திரங் கொ

வேதியர் திவ்வியஞானமடைந்து நந்னுக்கு சொல் தரு.

இராகம்-சாமா, தாளம்-ஆதி.

பல்லவி.

சிதம்பரம்போய்நீ வாருமையா நான்
செய்ததெல்லாமப சாரமையா சிதம்

அநுபல்லவி.

சிதம்பரம்போவீர் பதம்பெறுவீர் வேறே
சிந்தனைவேண்டாம் நந்தனேயினிமேல் சிதம்

சரணங்கள்.

எத்திசையிலுமுமக் கிணைசொல்லப் போமோ
பக்தியேமுதலென்று பழகியபெரியவர் சிதம்

சித்தமுந்தெளிந்தது தெய்வமேநீரென்று
புததியும்வந்தது சத்தியமல்லவோ சிதம்

நந்தனுக்கும் வேதியருக்கும் தர்க்கம்.

ஓரடியிலிரண்டு வார்த்தை, துக்கடா.

கண்ணிகள்.

நந்தனார்.	வேதியர்.
சிதம்பரதெரிசனங்கிடைக்குமோ	கிடைக்கும்
சென்மசாபல்யமாமோ	ஆகும்
பதம்பெறுந்தவ நெறியறிகிலேன்	அறிவீர்
பரமசிவனருள் செய்வாரோ	செய்வார்
சாதியில்தாழ்ந்தவனல்லவோ	அல்ல
சாத்திரமுறைமைக்குஞாயமோ	ஞாயம்
ஆதியம்பலத்தெய்வம்நாடுமோ	நாடும்
ஆனந்தமடைவேனோவையரே	அடைவீர்

வேதியரிடம் விடைபெற்று நந்தன் வழியில் பாடிக்கொண்டே செல்வது.

திருநீற்றுப்பதிகம் பண் காந்தாரம்.

1 மந்திரமாவது நீறு வானவர்மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர்வாயுமை பங்கன்றிரு வாலவாயான்றிரு நீறே

2 வேதத்திலுள்ளது நீறு வெந்துயர்தீர்ப்பது நீறு
போதந்தருவது நீறு புண்மைதவிர்ப்பது நீறு
வோதத்தகுவது நீறு வுண்மையிலுள்ளது நீறு
சீதப்புனல் வயல்சூழ்ந்த திருவாலவாயான்றிரு நீறே

3 முத்திதருவது நீறு முனிவரணிவது நீறு
சத்தியமாவதுநீறு தக்கோர்புகழ்வது நீறு
பத்திதருவது நீறு பரவவினியது நீறு
சுத்திதருவது நீறு திருவாலவாயான்றிரு நீறே

நந்தன் சொல் தரு.

இராகம் - தெண்டகம், தாளம் - ஆதி.

பல்லவி.

கோபுரதெரிசனமே எங்கள் பாபவிமோசனமே

அநுபல்லவி.

தாபங்கள்மூன் றுந் தணிந்துவிடும்நல்ல
சோபனமுண்டாம் சோதிவிளங்கிய கோ

சரணங்கள்.

விண்ணணைந்துமே லோங்கியேகண்டுநற்
கண்ணுளார்க்கெல்லாங் காட்சியளித்திடும் கோ
அல்லும்பகலும் அமரர்துதித்திடும்
தில்லைக்கிறையோன் றினமுமகிழ்ந்திடும் கோ

நந்தன் சொல் தரு.

இராகம் - கரகரப்பிரியை, தாளம் - ரூபகம்.

கெண்டாமணியாடுது கண்டுபிணிவாடுது
முத்துமணிதேடுது நாடுதுகூடுது கெண்டா
பரவசமாகுது பாவங்கள்போகுது கெண்டா
செனனமரணுதிகள் மோகமுந்தீர்ந்தது கெண்டா

நந்தன் தில்லையைகண்டு ஆனந்தித்து சொல்.

இராகம் - பியாகு, தாளம் - ஆதி.

பல்லவி.

இதுதானோ தில்லைத்தலம் இத்தனைநாளு மறியேன்
இதுதானோ தில்லைத்தலம்

அநுபல்லவி.

அதுவோ யிதுவோவென் றலைந்திடும் பேயனைக்
கதிதருவேனென்று கைகாட்டியழைத்திடும் இது

சரணங்கள்.

காசினியிலிதைக் கயிலையென் றெல்லோரும்
பேசக்கேட்டதேயன்றி பேணிபார்த்தறிந்திலேன் இது

நந்தன் சொல் தரு.

இராகம் - சாவேரி, திசரம - தாளம்.

பல்லவி.

ஆடியபாதத்தைத்தாரும் உம்மைத்
தேடிவந்தேன் இதோ பாரும் பாரும்

அநுபல்லவி.

நாடிபுகழ்ந்து தொழும் சிவகாமி மனோகரரே
தில்லைநடராஜரே யுமதுகையை விடமாட்டேன் ஆ

சரணங்கள்.

பாத்திரமல்லவோ பாலகிருஷ்ணன் பணிபரனே
சிதம்பரக்ஷேத்திரதெரிசனம் வீடுசேர்க்குமென் றறியேனே
மாத்திரபொழுதும்மைமறக்க வென்மனதுவராதென் றுமருவி
தோத்திரம்பண்ணமாட்டேன் சுவாமிஅதிலென்னசுகம்அம்ப
[லந்தனில். ஆ

நந்தன் சுவாமியை விடை கேட்குதல் தரு.

இராகம் - மாஞ்சை, தாளம் - ரூபகம்.

பல்லவி.

வருகலாமோவையா உந்தனருகில்நின் று
கொண்டாடவும் பாடவும்நான்

அநுபல்லவி.

பரமகிருபாநிதியல்லவோயிந்த பறையனுபசாரம்சொல்லவோ
உந்தன்-பரமாநந்தத்தாண்டவம் பார்க்கவேநானங்கே வரு

சரணங்கள்.

பூமியில்புலையனாய்ப் பிறந்தேனே நான்
புண்ணியஞ்செய்யாம லிருந்தேனே

சாமியுன்சந்நிதி வந்தேனே பவ
சாகரத்தையு மிழந்தேனே
கரைகடந்தேனே சரணமடைந்தேனே தில்லை
வரதாப்ரதாபமும் பாபமுந்தீரவே வரு

நந்தன் சொல் தரு.

இராகம் - தந்நியாசி, தாளம் - ஆதி.

பல்லவி

கனகசபாபதிதரிசனம் ஒருநாள் கண்டால்கலிதீரும்

அநுபல்லவி

ஜனகமகாமுனி கைதொழு தேத்திய
தினகரகோடி தேஜோன் மயமாகிய கன

சரணங்கள்.

1 மனதிலொடுங்கிய கல்மிஷம்போக்கும்
மாயப்பிணியதனை மறுவடிவாக்கும்
செனனமரணசமு சாரத்தைநீக்கும்
திருவடிநிழலிலே கூடியேயார்க்கும் கன

2 சுருதிமுடிகளிலுஞ் சொல்லிக்கொண்டாடும்
தூயவெளியைவெளி யாகவேகூடும்
தருமநெறியுந்தவ ருதுளநாடும்
ததிங்கிணத்தோமென்று தாண்டவமாடும் கன

3 பற்பலயோசனை செய்வதுந்தொல்லை
பரகதியடையவு பாயமுமில்லை
அற்புதமாகவே தாளொருசொல்லை
அணியுங்கோபால கிருஷ்ணன் பணியுந்தில்லை கன

நந்தன் அம்பலவாணனை நினைந்து சொல் தரு.

இராகம் - செஞ்சுருட்டி, தாளம் - ஆதி.

பல்லவி.

எப்போவருவாரோ எந்தன்கலிதீர எப்போவருவாரோ

அநுபல்லவி.

செப்பிய தில்லைச் சிதம்பரதேவன் எப்

சரணங்கள்.

1 நற்பருவம்வந்து நாதனைத்தேடும்
கற்பனைகள்முற்ற காட்சிதந்தாள எப்

2 அற்பசுகவாழ்வி லானந்தங்கொண்டேன்
பொற்பதத்தைக்காணேன் பொன்னம்பலவாணன் எப்

3 பாலகிருஷ்ணன்போற்றிப் பணிந்திடுமீசன்
மேலேகாதல்கொண்டேன் வெளிப்படக்காணேன் எப்

நந்தன் நித்திரையில் சொற்பனங்கண்டு சொல்

இராகம்-அரிகாம்போதி, தாளம்-திசாம்பு.

பல்லவி.

பார்க்கப்பார்க்கத் திகட்டுமோ-உன் பாததெரிசனம்
பார்க்கப்பார்க்கத் திகட்டுமோ

அநுபல்லவி.

ஆர்க்குமானந்தம் பொழியுந்தில்லைத்
தாண்டவராயா

தில்லைமூவாயிர முனிவர்கள்தினமும் பூசித்திடும்பாதம்
சிற்சபையில் திந்திமிதிமிதோமென் றாடியபாதம்
எல்லையில்லாயின்பம் எந்தனுக்கருள் செய்திடும்பாதம்
இரவும்பகலுமாயன் கோபாலகிருஷ்ணன் னேற்றும்பாதம் பா

இராகம் - தெண்டகம், தாளம் - ஆதி.

பல்லவி.

சந்நிதிவரலாமோ-சுவாமி-தெரிசனந்தரலாமோ சந்

அநுபல்லவி.

1 இல்லறவாழ்வாம்பனிமூடி இருந்தேனன்றேமிகவாதி
அல்லும்பகலுங்கொண்டாடி அரியேன்கனகசபைநாடி சந்

சரணங்கள்.

2 வீதியில்சற்றுவந்திருந்தேன்
வேடிக்கைபார்த்துகொண்டிருந்தேன்
சாதியிற்றாழ்ந்தவனென்றறிந்தேன்
தனித்திருப்பமென்றிங்குவந்தேன்

3 காலால்வீசிக்கனல்மூட்டி கலைமதிமண்டபமேலோட்டி
பாலார்பெருகவேளனைகூட்டி பார்த்ததுமில்லைநான்தோட்டி

நந்தன் சொல் தரு.

பல்லவி.

கனவோ நினைவோ கண்டது வீணே

அநுபல்லவி.

மனதிலுறுதிகொள்ள வழியொன்றுங்காணேன் கன

சரணங்கள்.

1 நித்திரைதனிலொரு சித்தனுருவாய்வந்து
முத்திதருவேனென்று நத்திப்பேசினதுண்டு கன

2 ஆருமிகழ்ந்துதள்ளும் நாறும்புலையனென்னை
வாரும்பரமபதஞ் சேருமென்றழைத்து கன

3 கிட்டநெருங்கிவந்து தட்டியெழுப்பியொரு
வெட்டவெளியைக்காட்டி கட்டளையிட்டது கன

வ-ம் தமக்கு முன்னிருந்த உடலமாகியமாசு தீரும் பொருட்டு அக்கினியாகிய திருமஞ்சனமாடி எழுந்து குற்றமற்ற பிராமண முனிவடிவமாகி ஸ்ரீநடேசப் பெருமானுடைய திருவடியை அடைந்தவராகிய திருநாளைப் போவாருடைய பாதத்தைப் புகழ்ந்து தீவினையாகிய கயிறு அறும்படி தில்லை மூவாயிர முனிவர்கள் போற்றி செய்துக்கொண் டிருந்தார்கள்.

97768

நந்தன் சரித்திரம் முற்றிற்று.

இனிய தமிழ் நாவல்கள்.

	ரூ.	அ.	ப.
கமலவல்லி அல்லது கன்னியின் சமர்த்து இரண்டுபாகமும்	3	8	0
ஷை பாகம் 1-க்கு ...	1	12	0
இளங்கோவன் அல்லது தவளமலைச்சுரங்கம் ...	1	4	0
தலைவாங்கி அபூர்வசிந்தாமணி ...	1	0	0
சௌந்தராபாய் அல்லது சதிகோலை ...	1	0	0
இருகோலைகளின் இரகசியம்: இஃது ஓர் துப்பறியும் நாவல்	1	0	0
ஆனந்த கதாசாகரம் அல்லது அற்புத வினோதக் கதைகள்	1	0	0
ராமாமணி ...	1	0	0
தலைவெட்டி தயாபரசுந்தரி ...	0	12	0
மலையாளமீனாள் அல்லது பொன்மலைப்புதுமை ...	0	12	0
வசீகரன் அல்லது அடிமையாலடைந்த அரசின் சுதந்தரம்	0	12	0
மோஹன் சிங் அல்லது குடும்பகோலையின் இரகசியம்	0	12	0
பங்கயச்செல்வி அல்லது பதிவிரதாசிரோமணி ...	0	12	0
விவேகாநந்தபோதம் அல்லது வைதீக வேதியர் ...	0	10	0
ஆனந்தரங்கன்: ஓர் நூதன துப்பறியும் நாவல் ...	0	10	0
புவனராணி அல்லது பூவையர் பூஷணம் ...	0	8	0
கற்பகவல்லி: ஓர் அதிசயக்கதை ...	0	8	0
ஜயலட்சுமி அல்லது கஷ்டத்தின் சுகம் ...	0	8	0
தனபதி: கணவனைப்பிரிந்த காதலியின் விந்தை ...	0	8	0
சுகுணசுந்தரி அல்லது காதலின் அழகும், கற்பின் சிறப்பும்	0	8	0
மோகன வல்லி: ஓர் இன்பரசக் கதை ...	0	6	0
பூபாலன்புவனசுந்தரி: ஆகாய விமானத்தின் அதிசயம்	0	6	0
மதன மனோகரி: ஓர் கற்பனையலங்காரக் கதை ...	0	6	0
தடிராமன்: இஃது ஓர் அகட விகட ஆனந்தக்கதை ...	0	6	0
விவேகாநந்தன்: இது சோகரசமுள்ள நாவல் ...	0	6	0
சுந்தராம்பாள்: அதிக வியப்பைத்தரக்கூடிய நாவல்	0	6	0
வாயாடிவம்பன்: ஓயாத சிரிப்பைத்தரும் ஓர் நவீனகதை	0	4	0
தங்கவேணி: ஓர் அற்புதக்கதை ...	0	4	0
நாட்டுப்புரத்தான் நகரப்பிரவேசம் ...	0	4	0
நாட்டுப்புரத்தான் நகரவாசம் ...	0	4	0

பாடசாலை மாணவர்களுக்கான தமிழ் புத்தகங்கள்.

ஜீமூதவாகனன்	0	8	0	நாயன்மார் சரித்திரம்	0	8	0
உத்தரகுமாரன்	0	8	0	மூப்பெருந்தொண்டர்	0	8	0
மனுச்சோழன்	0	8	0	முத்துக்குமரன்	0	5	0
தசமுகன்	0	8	0	அவ்வை	0	5	0
சூரபன்மன்	0	10	0				

இவை துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

எமது விலாசம்:—ஸ்ரீ பாரதி புத்தகசாலை,
சூளை போஸ்ட், சென்னை.

இகபர ஞான சாகரத்திரட்டு.

மனித வாழ்க்கைக்கு இன்றிமையாத இகபர ஞானத் தத்துவங்களைச் செவ்வனே போதித்து நல்வழிப்படுத்தும் அரிய விஷயங்களடங்கிய ஓர் சிறந்த நூல். தெய்வப் புலமை வாய்ந்த அருங்கவிகளாலும் சிவனடியார்களாலும் ஆழ்வாராசாரியர்களாலும் ஞானசாரிகளாலும் இன்னும் பண்டைய பக்த சிரோன்மணிகளாலும் திருவாய் மலர்ந்தருளப் பெற்ற பல பாகங்களும் இதிலடங்கியிருக்கின்றன. அணு 8.

ஸ்ரீ பகவத்தியானக் கொத்து.

இதில் ஈஸ்வரத்தியானம், கணேசதியானம், சிவ சண்முகானந்த தியானம், நவரத்தினத் திருப்புகழ், மயில் பாட்டு, அற்புத ஆனந்த தேவாரத்தோத்திரத்திரட்டு, இந்திய ஸ்நான உபதேசம், நாயன்மார்கள், திருநக்ஷத்திரக்கும்மி, தசாவதாரதியானம், ஸ்ரீ கிருஷ்ண பூசை, ஸ்ரீ கிருஷ்ணலீலாம்ருதம், ஸ்ரீ பூஜாராமாயணம், ஸ்ரீ நாம ராமாயணம், அற்புத ஆனந்தராமதியானம், ஆஞ்சநேய தியானம், நவக்கிரகத்திருப்புகழ் என்னும் 16-புஸ்தகங்களும் அவற்றிற்குள்ள அஷ்டோத்திரங்களுடன் ஐதீக படங்களும் சேர்த்து கிளேஸ் கடிதத்தில் பாகெட் அளவில் அச்சிடப்பட்டு நேர்த்தியான காலிகோ பயிண்டு செய்திருக்கின்றது ஒவ்வொருவரும் கடவுளை வழிபட்டு அவர் அன்பைப் பெறக்கூடிய தியான முறையைச் செவ்வனே எடுத்துக்காட்டும் நூல்களுள் இது மிகவும் சிறந்ததாகும். விலை ரூபா 1.

சரீரமர்ம சாஸ்திரம்	விலை ரூபா	1	0	0
கொக்கோகம்	விலை ரூபா	1	0	0
முத்தத்தின் மர்மம்	விலை ரூபா	1	8	0
பக்திமார்க்க விளக்கம்	விலை ரூபா	1	8	0

கலைமகள் விலாச புத்தகசாலை,

திருவொற்றியூர் போஸ்டு, மதராஸ்.

ஸ்ரீ பாரதி பிரஸ், சூளை, சென்னை.